செ1/ 29753 /15

தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை—6.
நாள். 24.06.2015

<u>சுற்றறிக்கை</u>

பொருள் ஊதியம் – தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் வங்கியின் மூலம் வழங்குதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

*******

சமீப காலமாக சில நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வேலை அளிப்பவர்கள், உரிய தேதியில் முறையான ஊதியத்தை வழங்குவதில்லை என இவ்வலுவலகத்தில் புகார்கள் பெறப்பட்டவண்ணம் உள்ளன. எனவே இத்துறையின் ஆய்வர்கள் நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளும்போது அந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை நிர்வாகங்கள் வங்கிகணக்கின் மூலம் வழங்குமாறு அந்நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி, கண்காணிக்குமாறு முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள சார்நிலை அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதன் மூலம் பணியில் உள்ள பணியாளர்களுக்கு சம்பளம் சரிவர வழங்கப்படுகிறதா என கண்காணிக்க இயலும். இச்சுற்றறிக்கை பெறப்பட்டமைக்கான ஒப்புதலை உடன் அளிக்குமாறு சார்நிலை அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்) xxx,
தொழிலாளர் ஆணையர்.

// உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது //

தொழிலாளர் துணை ஆணையர்
(குறைந்தபட்ச ஊதியம்)

பெறுநர்

1. அனைத்து தொழிலாளர் ஆய்வர்கள்.
   (துங்கள் ஆட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் இவ்விவரத்தை உடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)
2. அனைத்து தோட்ட நிறுவன ஆய்வர்கள்.
3. அனைத்து மகளிர் தொழிலாளர் ஆய்வர்கள்.
4. அனைத்து தொழிலாளர் துணை ஆணையர்கள்.
5. அனைத்து தொழிலாளர் இணை ஆணையர்கள்.
6. இருப்புக் கோப்பு.